# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018

**புவியியல் I, II**

**சுட்டெண் : …………………….** **தரம் – 10** **நேரம் : – மூன்று மணித்தியாலம்**

- **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.**
- **ஒவ்வொரு வினாாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

**பகுதி I**

- ***1* தொடக்கம் *10* வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01. வளிமண்டலத்தின் மொத்த வளி உள்ளடக்கத்தின் 50% புவிமேற்பரப்பிலிருந்து ………………. கிலோமீற்றர் வரை உள்ள பகுதியிலேயே பரந்துகாணப்படும்.
(10 - 16, 5 - 6 , 16 - 26)

02. வளிமண்டலத்தின் மிகத்தாழ்ந்த வெப்பநிலை …………………. மண்டலத்திலேயே நிலவுகின்றது.
(இடை, மாறன், படை)

03. கண்ட ஓடு அதிகளவு கொண்டுள்ள மூலகம் …………….. ஆகும்.
(மக்னீசியம் ,அலுமினியம் ,கந்தகம்)

04. சமுத்திரத்துடன் இணைவைக் கொண்ட கடல் ……………………… ஆகும்.
(கஸ்பியன் கடல், சாக்கடல் ,சீனக்கடல்)

05. உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன்முதலில் வெளியிட்டவர் ……………..…….. ஆவார். (மில்லர், அரிஸ்ரோட்டில், கெப்பன்)

06. இத்தாலியின் …………….. வடிநிலம் நெற்செய்கை இடம்பெறுகின்ற முக்கிய இடமாகும்.
(நைல் ,போ, மிசிசிப்பி)

07. உலக இயற்கை இறப்பரின் மொத்தஉற்பத்தியில் 95% …………………………… நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது.
(தெற்கு தென்கிழக்காசியா, மேற்கு ஐரோப்பா, கிழக்காசியா)

08. இலங்கையின் சேதன உர மத்தியநிலையம் ………………………மாவட்டத்தில் அமைந்துள்ளது.
(குருநாகல், மாத்தளை, அனுராதபுரம்)

09. ஜப்பானில் இரும்புருக்கு மையங்களில் முக்கியமானது…………………… பிரதேசமாகும்.
(கோபே, தென்வேல்ஸ் ,சான்சிங்வான்)

10. இலங்கையின் இடவிளக்கப படத்தாள் ஒன்றினால் காட்டப்படும் பரப்பளவு……………………..
(1000 சதுரசென்றிமீற்றர், 1000 சதுரகிலோமீற்றர், 10000 சதுர கிலோமீற்றர்)



kalvi.lk

- ***11–15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்துஅவைசரியாயின் "ச" இனையும் பிழையாயின் "பி" இனையும் சுற்றிவட்டமிடுக.***

*11.* உலகின் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள ஏரி தித்ததிக்கா ஆகும் (ச / பி)

*12.* புவியின் மொத்த நிலத்திணிவில் ஏறக்குறைய 1% புவியோடு கொண்டுள்ளது (ச / பி)

*13.* மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தட்டையான நிலம் மேட்டுநிலம் ஆகும். (ச / பி)

*14.* உலகில் பெரும்பாலான மக்களின் முக்கிய உணவு நெல் ஆகும். (ச / பி)

*15.* றைன் நதியானது ஏரியிலிருந்து உற்பத்தியாகிறது. . (ச / பி)

- ***16 – 20 வரையான வினாக்களிற்கு 'அ' மற்றும் 'ஆ' என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையிலான தொடர்புகளின் அடிப்படையில் பொருந்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதிகளின் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.***

*16.*

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A. நீராவி, முகில், தூசு துணிக்கைகள் அற்றது |
| 2. படை மண்டலம் | B. வாயுக்கள் மிகக் குறைவு |
| 3. இடை மண்டலம் | C. வெப்ப நழுவு வீதம் செயற்படல் |
| | D. விண்கற்கள் எரிந்து அழிதல் |

1) CDA 2) CAD 3) BAC 4) DAB (……………..)

17.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. மேல் மூடி | A. சிலிக்கன், மக்னீசியம் |
| 2. கண்ட ஓடு | B. நிக்கல், இரும்பு |
| 3. வெளி மையம் | C. சிலிக்கா, அலுமினியம் |
| | D. ஒலிவைன், சிலிக்கேற்று |

1) ACB 2) DCB 3) CBA 4) CAB (……………)

*18.*

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வட அமெரிக்கா | A. மன்சூரியன் சமவெளி |
| 2. தென் அமெரிக்கா | B. நுல்லபார் சமவெளி |
| 3. ஆசியா | C. பிறேசிலியன் மேட்டுநிலம் |
| | D. அப்பலாச்சியன் மலை |

1) CDB 2) ACD 3) CAB 4) DCA (……………)

*19.*

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அமுர் | A. கஸ்பியன் கடல் |
| 2. வொல்கா | B. பசுபிக் சமுத்திரம் |
| 3. டன்யூப் | C. வங்களாவிரிகுடா |
| | D. கருங்கடல் |

1) BAD 2) DAB 3) CBA 4) DCB (……………)



Education கல்வி

kalvi.lk

20. ‘அ’ ‘ஆ’

| ‘அ’ | ‘ஆ’ |
| --- | --- |
| 1. புத்தளம் | A. அகலவத்தை |
| 2. அநுராதபுரம் | B. தலவாக்கலை |
| 3. களுத்துறை | C. லுணுவில |
| | D. மகா இலுப்பல்லம |

1) CDB 2) ADB 3) BDC 4) CDA (……………)

- **21 – 30 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களை உபயோகித்து பூரணப்படுத்துக.**

21. உயிர்க்கோளத்தின் நிலைப்புக்கு அவசியமான ஓசோன்படை ………………… மண்டலத்தில் அமைந்துள்ளது.
22. பௌதீகப் பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கி அமைக்கப்படும் படம் …………… ஆகும்.
23. உயரம் குறைந்தமிகவும் பரந்தபிரதேசத்திலே வியாபித்துக் காணப்படும் தட்டையான நிலம் ……………………… எனப்படும்.
24. $66\,{}^{1}/_{2}{}^{\circ}$ வட அகலக்கோடு ………………… எனப்படும்.
25. புவியின் பாரியளவான நிலவுருவங்களாக சமுத்திரங்களும் ……………………. காணப்படுகின்றது.
26. அதிக விளைச்சல் தரும் புதியகோதுமை இனமாகக் …………………. கொள்ளப்படுகின்றது.
27. கண்டமேடையின் விளிம்பில் இருந்து சமுத்திரத்தை நோக்கி சாய்வாக அமைந்துள்ள நிலப்பகுதி ……………………… என அழைக்கப்படும்.
28. தட்டையான நிலம், சேணாசம்மண் ஆகியன ………………….. பயிர்ச்செய்கைக்குச் சாதகமான காரணிகளாகக் காணப்படுகின்றன.
29. நதி முகத்துவாரமும் ஏரிகளும் ………………. மீன்பிடிக்கு பொருத்தமான இடமாகும்.
30. பருத்திப்புடவை உற்பத்தியில் முக்கியத்துவம் பெற்ற ஆபிரிக்கநாடு ………………. ஆகும்.

- **31 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினை தெரிவுசெய்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31. புவிமேற்பரப்பில் நன்னீரின் சதவீதம்
   1. 2.5% 2. 97.5% 3. 20% 4. 79% (……………)
32. பைக்கால் ஏரி காணப்படும் கண்டம்
   1. ஐரோப்பா 2. அவுஸ்ரேலியா 3. ஆசியா 4. ஆபிரிக்கா (…………)
33. மரமுந்திரி ஏற்றுமதிக் கிராமம் அமைந்துள்ள இடம்
   1. ராஜாங்கன 2. கட்டுகம்பொல 3. தம்பதெனிய 4. குருணாகல (…………)
34. அம்பேவல பாற்பண்ணை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம்
   1. பொலன்னறுவை 2. நுவரெலியா 3. அனுராதபுரம் 4. பதுளை (………..…)



kalvi.lk

35. நெற் செய்கையில் தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடியகவனம் செலுத்தும் முக்கியநாடு

1. இந்தியா 2. பாகிஸ்தான் 3. இலங்கை 4. சீனா (……………..…)

- **கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி 36,37 வினாக்களிற்கான விடையைத் தெரிவுசெய்க.**

A - சுவட்டு எரிபொருள் தகனம்

B - நீரின் தரம்

C - உயிரினங்கள் பாதிப்பு

D - பூகோள வெப்ப அதிகரிப்பு

36. ஒரு காரணியில் ஏற்படும் வீழ்ச்சி இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை குறித்துக் காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கும் விடை

1. AB 2. BC 3. AD 4. AC (………...…)

37. ஒரு காரணியில் ஏற்படும் அதிகரிப்பு இன்னொரு காரணியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை குறித்துக்காட்டும் கூற்றுக்களைக் கொண்ட இரு எழுத்துக்களை உள்ளடக்கும் விடை

1. AD 2. BC 3. AC 4. AB (…………)

38. இலங்கையில் 1 : 50000 படங்களில் அளி அடைப்பில் செங்குத்தான மற்றும் கிடையான கோடுகள் வரையப்பட்டுள்ள நிறம்

1. கறுப்பு 2. சிவப்பு 3. மஞ்சள் 4. நீலம் (…………)

39. முழுமையான அம்புக்குறி ஒன்றுடன் குத்தாகக் காணப்படும் கோட்டினால் குறித்துக் காட்டப்படும் வடக்கு.

1. உண்மை வடக்கு 2. காந்தவடக்கு

3. அளியடைப்பு வடக்கு 4. புவியியல் வடக்கு (…………)

40. இலங்கையின் தனித்துவ பொருளாதார வலயம்

1. 12 கடல்மைல் 2. 24 கடல்மைல்

3. 200 கடல்மைல் 4. 50 கடல்மைல் (…………)

(40×1= 40 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்
## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018
### புவியியல் II


சுட்டெண் : …………………..  தரம் – 10

- முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

**பகுதி II**

*01. அ.*

**தரப்பட்ட இடவிளக்கப் படத்தினை அவதானித்து பின்வரும் வினாக்களிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**




i) A - B குறிக்கும் பௌதீக அம்சம் எது?

(சுவடு / பள்ளத்தாக்கு / கணவாய்)

ii) C - D குறிக்கும் பௌதீக அம்சம் எது?

(மென்சாய்வு / சுவடு / பள்ளத்தாக்கு)

iii) E - F குறித்துக் காட்டும் அம்சம் எது?

(சுவடு / பள்ளத்தாக்கு / குழிவுச் சாய்வு)

iv) G - H குறித்துக் காட்டும் அம்சம் எது?

(குத்துச்சாய்வு / குவிவுச்சாய்வு / மென்சாய்வு)

v) I குறிக்கும் பௌதீக அம்சம் எது?

(நீள்குன்று / கூம்புக்குன்று / பாறைத்தொடர்)


(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

ஆ.

**உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினை கவனமாக பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**




i) A, B, C எனத் தரப்பட்ட எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படும் நதிகளுள் வொல்கா நதியினை குறிக்கும் எழுத்து யாது?

ii) M, N, O எனத் தரப்பட்ட எழுத்துக்களால் காட்டப்படும் மலைகளுள் அல்ப்ஸ் மலையை குறிக்கும் எழுத்து யாது?

iii) J, K, L எனத் தரப்பட்ட எழுத்துக்களில் கரீபியன் கடலை குறிக்கும் எழுத்து யாது?


iv) P, Q, R எழுத்துக்களினால் காட்டப்படும் ஏரிகளுள் அயர் ஏரியை குறிக்கும் எழுத்து யாது?

v) X, Y, Z எழுத்துக்களால் காட்டப்படும் மேட்டுநிலங்களுள் ஈரான் மேட்டு நிலத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

(5 x 1 = 5 புள்ளிகள்)

இ.

**உமக்குத் தரப்பட்ட இலங்கைப் படத்தினை பரிசீலித்து கீழே தரப்பட்ட வினாக்களிற்கு விடையளிக்குக.**






kalvi.lk

i) A, B, C எழுத்துக்களால் காட்டப்படும் இடங்களில் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினை குறிக்கும் எழுத்து எது?

ii) P, Q, R நெல் ஆராய்ச்சி நிலையங்களுள் ஹிங்குராங்கொட நெல் ஆராய்ச்சி நிலையத்தை குறிக்கும் எழுத்து எது?

iii) K, L, M எழுத்துக்களால் காட்டப்படும் மீன்பிடித்துறை முகங்களில் வெலிகம மீன்பிடித்துறை முகத்தை குறித்துக் காட்டும் எழுத்து எது?

iv) H, I, J எழுத்துக்களில் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை குறிக்கும் எழுத்து எது?

v) X, Y, Z எழுத்துக்களில் கறுவா பயிரிடப்படும் இரத்தினபுரி மாவட்டத்தினை குறிக்கும் எழுத்து எது?

(5 x 1 = 5 புள்ளிகள்)

02. i) கற்கோளம் என்றால் என்ன?

(2 புள்ளி)

ii) மனிதனுக்கு வளிமண்டலத்தினால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக?

(3 புள்ளி)

iii) நீர் மாசடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மானிட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக.

(5 புள்ளி)

03. i) முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கடல்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)


ii) மலைத்தொடர்கள் என்றால் என்ன?

(3 புள்ளி)

iii) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் மூன்றினையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளி)

**4ம் 5ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள உலகப்படத்தினை பயன்படுத்துக.**






kalvi.lk

04. i) உலகின் பிரதான கோதுமை உற்பத்தி நாடுகள் A, B யினால் எழுத்திடப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு பெயரிடுக.

(2 புள்ளி)

ii) கோதுமை உற்பத்திக்கு அவசியமான மூன்று பௌதீகக் காரணிகளைப் பெயரிடுக.

(3 புள்ளி)

iii) உலக சந்தையில் கோதுமை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

05. i) மேலே உள்ள உலகப்படத்தில் C மற்றும் D எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள பாற்பண்ணைக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற நாடுகளைப் பெயரிடுக.

(2 புள்ளி)

ii) இந் நாடுகளில் பாற்பண்ணையின் விருத்திக்குப் பங்களித்த காரணிகள் மூன்று தருக?

(3 புள்ளி)

iii) a. பாற்பண்ணைக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்று தருக?

(3 புள்ளி)

b. பாற்பண்ணைக் கைத்தொழிலின் புதியபோக்குகள் இரண்டு தருக?

(2 புள்ளி)

06. i) இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

(2 புள்ளி)

ii) இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கையின் மூன்று பிரிவுகளும் எவை?

(3 புள்ளி)

iii) இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழிலின் விருத்திக்கு பங்களிப்பு செய்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளி)

07. i) உலகில் பருத்தி பயிரிடப்படும் முக்கியமான ஐரோப்பிய நாடு ஒன்றினையும் ஆசிய நாடு ஒன்றினையும் குறிப்பிடுக.

(2 புள்ளி)

ii) சீனாவில் இரும்புருக்கில் முக்கியம் பெற்ற பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3 புள்ளி)

iii) உலகில் தயாரிப்புக் கைத்தொழில்கள் சார்ந்த பிரச்சினைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளி)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை

## புவியியல்

தரம் - 10 | விடைகள் | புள்ளித்திட்டம்

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| *01.* | 5 - 6 km | 02. | இடை |
| 03. | அலுமினியம் | 04. | சீனக்கடல் |
| 05. | அரிஸ்ரோட்டில் | 06. | போ |
| 07. | தெற்கு தென்கிழக்காசியா | 08. | குருநாகல் |
| 09. | கோபே | 10. | 1000 சதுரகிலோமீற்றர் |
| 11. | "ச" | 12. | "ச" |
| 13. | "ச" | 14. | "பி" |
| 15. | "பி" | 16. | CDA |
| 17. | DCB | 18. | DCA |
| 19. | BAD | 20. | CDA |
| 21. | படை | 22. | இடவிளக்கப்படம் |
| 23. | சமவெளி | 24. | ஆட்டிக்வட்டம் |
| 25. | கண்டங்களும் | 26. | நொரின் 10 |
| 27. | கண்டச்சாய்வு | 28. | கோதுமை |
| 29. | உவர்நீர் | 30. | எகிப்து |
| 31. | 2.5% | 32. | ஆசியா |
| 33. | தம்பதெனியா | 34. | நுவரெலியா |
| 35. | இலங்கை | 36. | BC(2) |
| 37. | AD(1) | 38. | நீலம் |
| 39. | அளியடைப்பு வடக்கு | 40. | 200 கடல்மைல் |

(40 x 1= 40 *புள்ளிகள்)*

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## புவியியல் - II

01. (A)

1) கணவாய்
2) சுவடு
3) பள்ளத்தாக்கு
4) மென்சாய்வு
5) கூம்புக்குன்று

(5 x 2 = 10 புள்ளிகள்)

(B) 1) B
2) O
3) K
4) Q
5) Z

(5 x 1 = 5 புள்ளிகள்)

(C) 1) C
2) R
3) L
4) H
5) Y

(5 x 1 = 5 புள்ளிகள்)

02. (1) புவியோடு மற்றும் மேல்மூடியினை உள்ளடக்கிய வலயம் கற்கோளம் எனப்படும்.

2 புள்ளிகள்

(2) உயிர்களின் சுவாசத்துக்கு அவசியமான ஒட்சிசனை வழங்குகிறது.
ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்குத் தேவையான காபனீரொட்சைட் வாயுவை வழங்குகின்றது
விண்வெளியில் இருந்து பூமியை நோக்கி வரும் விண்கற்களை எரிந்து அழியச் செய்கிறது.
உயிரினங்களினதும் தாவரங்களினதும் நிலைத்திருப்பிற்கு உதவுகின்றது.
சூரியனில் இருந்து வரும் புறவூதாக் கதிர்களை புவிக்கு வரவிடாமல் தடுக்கின்றது.

மூன்றினைக் குறிப்பிட்டால்

3 புள்ளிகள்



kalvi.lk

(3) கைத்தொழில் நடவடிக்கையின் போது பல்வேறு வகையான இரசாயன மற்றும் சேதனப் பொருட்கள் நீரில் கலத்தல்.

விவசாயத்துக்காக பயன்படுத்தப்படும் உரவகைகள், கிருமி நாசினிகள் நீருடன் கலத்தல்.

கழிவுப்பொருட்களை நிலத்தில் புதைப்பதனால் தரைக்கீழ் நீர் மாசடைதல்.

இறந்த பொருட்கள், கழிவுகளை நீரில் கொட்டுவதால் நீர் மாசடைதல்

மூன்றினையும் குறிப்பிட்டால்
3 புள்ளிகள்
ஒன்றினை விளக்கினால்
2 புள்ளிகள்

03. (1) கஸ்பியன்கடல், ஏரல்கடல், சாக்கடல்

2 புள்ளிகள்

(2) பல்வேறு சிகரங்களையும் சாய்வுகளையும் கொண்ட உயர் எழுச்சிகளுடன் கூடியதாகப் பரந்துள்ள நிலத்தோற்றங்கள் மலைத்தொடர்கள் எனப்படும்.

**உ + ம்**

றொக்கி, அந்தீஸ், இமாலயம்

3 புள்ளிகள்

(3) அயனவலயம்

இடைவெப்ப வலயம்

கடுங்குளிர் வலயம் அல்லது முனைவு வலயம்

மூன்றினையும் குறிப்பிட்டால்
3 புள்ளிகள்
ஒன்றினை விளக்கினால்
2 புள்ளிகள்

Education கல்வி අධ්‍යාපන

04. (1) A- ஐக்கிய அமெரிக்கா

B – சீனா

2 புள்ளிகள்

2) குளிர்ச்சியான ஈரக்காலநிலை

300 - 500mm இடையிலான மழைவீழ்ச்சி

நன்கு நீர்வடிந்து செல்லும் தட்டையன நிலம்

சேணாசம் மண்

3 புள்ளிகள்

(3) அதிக மக்கள் பயன்படுத்தும் தானியமாக இருத்தல்

பல்வேறு வகையாக உணவுப் பண்டங்களை தயாரித்தல்

கோதுமைக்கு பரந்த சந்தை வாய்ப்புக் காணப்படல்

காரணங்கள் – 3 புள்ளிகள்
ஒன்றை விளக்கினால்
2 புள்ளிகள்



kalvi.lk

05. (1) A- ஆர்ஜென்ரீனா, B- நியூசிலாந்து

2 புள்ளிகள்

(2) பரந்த புல்நிலம் காணப்படல்

நீர்வசதி

பயிற்றப்பட்ட தொழிலாளர்

புதிய தொழில்நுட்பம்

பரந்த சந்தை வாய்ப்பு

3 புள்ளிகள்

(3) a) புல்நிலங்களின் அளவு குறைவடைதல்

உற்பத்திச்செலவு அதிகரிப்பு

மூலதனப் பற்றாக்குறை

சூழல் மாசடைதல்

தொற்றுநோய்கள்

பொருத்தமான தொழிலாளர் இன்மை

3 புள்ளிகள்

b) புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல்

விலங்குகளுக்கு தேவையான நீர்வசதிகளை அதிகரித்தல்

போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பு

உற்பத்திகளை பன்முகப்படுத்தல்

தொழிலாளர்களுக்கான பயிற்சிகள்

2 புள்ளிகள்

06. (1) மாத்தளை

2 புள்ளிகள்

(2) உயர்நிலத்தேயிலை

மத்திய நிலத்தேயிலை

தாழ்நிலத்தேயிலை

3 புள்ளிகள்

(3) சமுத்திரத்தினால் சூழப்பட்ட தீவு

தீவைச்சுற்றிய கண்டமேடை

கடலடித்தள மேடைகள்

பல்லுருவக் கடற்கரை

நீரோட்டங்களின் செயற்பாடு

ஆறுகள் அருவிகள் கடலுடன் கலத்தல்

மூன்று காரணிகள் – 3 புள்ளிகள்

ஒன்றினை விளக்கினால்

2 புள்ளிகள்



kalvi.lk

07. (1) ஐரோப்பா – போர்த்துக்கல், பிரித்தானிய (யாதாயினும் ஒரு நாடு)

ஆசியா – சீனா, ஜப்பான், இந்தியா (யாதாயினும் ஒரு நாடு)

2 புள்ளிகள்

(2) தெற்கு மஞ்சூரியப் பிரதேசம்

பீஜிங் பிரதேசம்

சன்சிங்வான் பிரதேசம்

3 புள்ளிகள்

(3) மூலப்பொருள் சார்ந்த பிரச்சினைகள்

தொழிலாளர் சார்ந்த பிரச்சினைகள்

சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்

சமூக பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகள்

சந்தை சார்ந்த பிரச்சினைகள்

சக்தி மற்றும் வலு தொடர்பான பிரச்சினைகள்

மூன்று பிரச்சனைகள் – 3 புள்ளிகள்
ஒன்றினை விளக்கினால்
2 புள்ளிகள்

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**